விலை: சதம் 75 ★ ★

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆவணி 30 துல்ஹஜ் 15 இதழ் 213
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-9-1981

யாழ் ஹோல்
[YARL HALL]
93, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
DAY CLASS
[12-30 TO 4-15]
ஆரம்பம்: 16-9-81
அனுபவமுள்ள பிரபல்யமான ஆசிரியர்களால் நடாத்தப்படும்.
0944

★ பொய்ச் சாட்சியம் சிருஷ்டித்ததாக வழக்கு:

# பொலிஸார் சம்பந்தப்பட்ட தீர்ப்பு: 21-ல் வழங்கப்படும்

(நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்)

**பொய்ச் சாட்சியம் சிருஷ்டித்ததாக தொடரப்பட்ட வழக்கில் விளக்க மறியலில் வைக்கப்பட்ட இருசந்தேக நபர்களான பொலிஸார் சம்பந்தப்பட்ட தீர்ப்பை யாழ். நீதவான் ரி. ஜோகநாதன் இம் மாதம் இருபத்தோராம் திகதி வழங்குவார்.**

யாழ். நீதிமன்றத்தில் யாழ். நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்டாகக் கடமையாற்றிய வேலாயுதபிள்ளை, றிசேர்வ் பொலிசாகக் கடமையாற்றிய இரகுநாதன் ஆகியோர் மீது பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்ததாக இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாதது குறித்தே நேற்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

அரச தரப்பில் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பகுதி பொலிஸ் உதவிக்கண்காணிப்பாளர் திரு. பிரேமச்சந்திரா பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எம். பி. ஆலிவ் உதவியுடன் ஆஜரானார்.

சந்தேக நபர் வேலாயுதபிள்ளை தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். விசுவநாதன், எஸ். லோகேஸ்வரன், ரி. சோமசுந்தரம், ஆகியோரும் சந்தேக நபர் இரகுநாதனின் தரப்பில் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் சட்டத்தரணி த, சூரிய குமாரனின் உதவியுடன் ஆஜரானார்கள்.

சட்டத்தரணி ஆர். விசுவநாதன்: "கடந்த தவணை சந்தேக நபர் வேலாயுதபிள்ளை மன்றுக்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த மன்று சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரியின் பொறுப்பில் விளக்கமறியலில் வைத்து அப்படி வைத்த சந்தேக நபர்களை சென்ற தவணை மன்றுக்குக் கொண்டு வராததற்கு விளக்கம் கொடுக்கும்படி மன்று சிறைச்சாலை அதிகாரிக்கு அறிவித்தல் அனுப்பியிருந்தது. அவர் இன்று மன்றில் சமுகமாக இருக்கின்றார்.

சட்டத்தரணி பெர்ணண்டோ: "நான் அன்று சிறைச்சாலை அதிகாரியின் சார்பில் மன்றில் தோன்றியிருக்கிறேன். அவருக்கு மன்று சந்தேக நபர்களை ஏன் மன்றுக்குக் கொண்டுவரவில்லை என்பதுக்கு விளக்கம் கொடுக்கும்படி அறிவித்தல் அனுப்பியிருந்தது' சந்தேக நபர்கள் இருவரும் மன்றின் முன்னிலையில் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டத்தின் கீழ் அதாவது சாதாரண சட்டத்தின் கீழ்தான் முறையாக ஒப்படைக்கப்பட்டு விளக்கமறியலில் சிறைச்சாலை அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டனர். அந்தச்சந்தேக நபர்களை பயங்கரவாத தடுப்புக்காவல் சட்டத்தின் 9ம் பிரிவில் இராணுவத்தினரிடம் அமைச்சரின் உத்தரவுக்கமைய சிறை ஆணையாளரின் பணிப்பின்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரி ஒப்படைத்தார். குறித்த கட்டளைச் சட்டம் விசேடமாக ஒரு சூழ்நிலையில் பயன்படுத்துதற்கு ஆக்கப்பட்டது குறித்த விசேட சட்டம் சாதாரண சட்டத்திலும் பார்க்க மேலானதும், வலுவுள்ளதுமானதாக இருக்கின்றது. குறித்த 9ம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் சந்தேக நபர்கள் யாராயிருந்தாலும்சரி. அவர்கள் எங்கிருந்தாலும் சரி அவர்களை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடலாம். அமைச்சரின் கட்டளையின் பேரில் சிறைச்சாலை ஆணையாளர் யாழ் சிறைச்சாலை அதிகாரிக்கு குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும்படி பணித்துள்ளார். குறித்த தடுப்புக்காவல் கட்டளைச்சட்டம் சரியானதா தவறானதா என்பதையிட்டு தீர்மானிக்க இந்த மன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை தடுப்புக்காவல்

[6ம் பக்கம் பார்க்க]

## அரசு - கூட்டணி நாளை மீண்டும் சந்திப்பு

[கொழும்பு]

தமிழர் தொடர்பான பிரச்னைகள் பற்றி ஆராயவும் நாட்டில் இனக்குரோதத்தைப் போக்கி அமைதிச் சூழ்நிலையை உருவாக்கவும் என ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் நடைபெற்றுவரும் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளின் மேலும் ஒரு சுற்றுப் பேச்சுக்கள் நாளை மாலை மீண்டும் ஆரம்பமாகவிருக்கின்றன.

ஐ. தே. க. குழு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலும் த. வி. கூட்டணி குழு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையிலும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்கின்றன.

ஜனாதிபதி மாளிகையில் நாளை மாலை 6.30 மணிக்குப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

ஏற்கனவே இடம்பெற்றுள்ள

[6ம் பக்கம் பார்க்க

## மைத்திரி மனுமீது செப். 22-ல் தீர்ப்பு

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவிக்கு எதிராக திரு. மைத்திரிபால சேனநாயக்கா தாக்கல் செய்திருந்த மனுமீதான தீர்ப்பு செப்டம்பர் 22ம் திகதி வழங்கப்படும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தம்மை இடைநிறுத்தி வைத்ததை ஆட்சேபித்து திரு மைத்திரிபால சேனநாயக்கா அக்கட்சியின் தலைவி திருமதி. சிறிமாபண்டாரநாயக்காவிற்கு எதிராக மனுவொன்றை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுமீதான தீர்ப்பு செப்டம்பர்மாதம் 22ம் திகதி வழங்கப்படுமென கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. விமால் விக்கிரமசூரியா அறிவித்துள்ளார். [வெ]

## திருமலை -மட்டக்களப்பு ரயில்சேவை பாதிப்பு

[மட்டக்களப்பு]

திருகோணமலை, மட்டக்களப்பு ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சரக்கு ரயில்வண்டியொன்று மகோவிற்கும் மொறேகொல்லகம விற்குமிடையில் நேற்று தடம் புரண்டதினாலேயே இவ் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை இச்சேவை வழமைக்கு திரும்புமென ரயில்வே திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். [வெ]

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## நன்கு திட்டமிட்டே வன்செயல் நடந்துள்ளதாம்

### 'கைதானவர்கள் பொலிசாருக்குத் தகவல்?

[கொழும்பு]

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் கருதுகின்றனர்.

கலவரங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பலரை நெருக்கியதில் இத்தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிகின்றது.

கலவரங்கள் நடப்பதற்கு சிலவாரங்களுக்குமுன்பே இதற்கான பண கொடுப்பனவுகள் நடந்திருப்பதாகவும் ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டிருப்பதாகவும்பொலிசார்கருதுகின்றனர்.

**அவசரகாலம் நீடிக்குமா?**

இதற்கிடையில் வன்முறைகள் காரணமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலநிலைமையைத் தொடர்ந்தும் வைத்திருப்பதா நீக்குவதா என்று கூடி தேசிய பாதுகாப்புக்கு முடிவெடுக்கவிருக்கின்றது.

வன்செயல்கள் தொடர்பாக ஆயிரம் முறைப்பாடுகள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளனவாம்

பலர் இன்னும் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இம்முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் தெற்குப் பிராந்திய உதவிப் பொலிஸ்மா அதிபர் திரு பிராஸ் டி. சில்வா தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விசாரணைகள் பற்றிய முழு அறிக்கையினையும் இன்னும் சில நாட்களில் தாம் பாதுகாப்பமைச்சிற்கு கையளிக்கவிருப்பதாக இக்குழுவினர்

[6-ம் பக்கம் பார்க்க]

## கடல்கடந்த தமிழர் இன்னலில் அண்ணா காட்டிய அக்கறை

### யாழ். மேயர் விடுத்துள்ள செய்தி

[யாழ்ப்பாணம்]

"முத்தமிழ் வித்தகராக வாழ்வின் துறைகள் தோறும் பிரபல்யம் பெற்றுத் தமது முத்திரையைப் பதித்துக் கொண்ட அறிஞர் அண்ணா கடல் கடந்த தமிழர்களின் இன்னலிலும் பங்கு கொள்ளத் தவறவில்லை. சிறப்பாக இலங்கைத் தீவில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் இங்குள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களும், பூர்வகுடித் தமிழர்களும் கொடுமைகளுக்கு இலக்கான நேரத்தில்அதனை ஆட்சேபித்து ஆர்ப்பாட்ட அணிவகுப்புக்களைப், பேரணிகளை சென்னையின் வீதிகளில் நடப்பித்து, மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டங்களைச் சென்னை மரீனா கடற்கரை மைதானத்திலே நடத்திய முதல்வர் அறிஞர் அண்ணாதாம்."

அறிஞர் சி. என். அண்ணாத்துரையின் பிறந்த நாளை

[6-ம் பக்கம் பார்க்க]

## வவனியா பால் சேகரிக்கும் நிலையத்தில்

# பால்தொட்டி பற்றுக்குறையால்

# சேகரிப்பாளர் பாதிப்பு

### அமைச்சருக்குப் புகார்

(வவனியா)

வவனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பால் சேகரிக்கும் நிலையத்தில் பால் சேகரிப்பதற்கான தொட்டி பற்றுக்குறை நிலவுகிறது. இதனால் மன்னார் பகுதியில் இருந்து சேமித்து அனுப்பப்படும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட லிட்டர் பாலை இந்நிலையத்தில் ஏற்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. அத்துடன் வவனியா கிளிநொச்சி பகுதியில் மேலும் புதிதாக உற்பத்தியாகி சேகரிக்கப்படும் பாலையும் ஏற்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக நிலையத்தின் பொறுப்பதிகாரி திரு. ரீ. கனகரட்னம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டிலும் பார்க்க 40 வீதம் பால்சேகரிப்பில் வவனியா மாவட்டம் முன்னேறியுள்ளது. தற்பொழுது வவனியாவில் இருந்து 4500 லிட்டர் பாலும் கிளிநொச்சியில் இருந்து 1500 லிட்டரும் மொத்தமாக ஆறாயிரம் லிட்டர் பால் நாளொன்றிற்குச் சேமித்து பொலன்னறுவைக்கு அனுப்பப்படுகின்றது.

மன்னார் பால் சேகரிக்கும் நிலையத்தில் சேகரிக்கப்படும் பால் இங்கு ஏற்கப்படாததால் அம் மாவட்டத்தின் பால்சேகரிப்பாளர்கள் தாம் சேகரிக்கும் பாலை விற்பனை செய்வதில் பெரும் கஷ்டப்படுகிறார்கள்.

இதுதொடர்பாக வவனியா பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமும் வவனியா கால்நடை வளர்ப்பாளர் ஐக்கியமுகத்தின் தலைவர் திரு. எம். ஜி. நாதனும் கிராமிய கைத்தொழில் அமைச்சிற்கும் தேசிய பால்சபையினருக்கும் உடனடியாக மேலதிக பால் தொட்டி ஒன்றினை வழங்குமாறு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

# கோவூரின் எலும்புக்கூடு

(கொழும்பு)

காலஞ்சென்ற பெரும் பகுத்தறிவாளரான டாக்டர் ஏப்ரஹாம் கோவூரின் எலும்புக்கூடு தேர்ஸ்டன் கல்லூரி உயிரியல் ஆய்வு கூடத்திற்கு வழங்கப்படவுள்ளது.

டாக்டர் கோவூர் இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்தை ஸ்தாபித்து அதன் தலைவராகவுமிருந்தவர்.

இக்கையளிப்பு வைபவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு தேர்ஸ்டன் கல்லூரி உயிரியல் ஆய்வுகூடத்தில் இடம்பெறவுள்ளது.

டாக்டர் ஏப்ரஹாம் கோவூர் முன்பு இக் கல்லூரியில் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியராகவும் ஒழுக்கநெறி ஆசிரியராகவும் கடமையாற்றினாரென்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் கோவூரின் விருப்பப்படியே எவ்வித சமய அனுட்டானங்களெதுவுமின்றி அவரது பூதவுடல் ஒரு வருடத்திற்கு முன்பு கொழும்புப் பல்கலைக்கழக பிரேதச்சாலைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இவரது மனைவியின் உடலும் இவ்வாறே மருத்துவ மாணவர்களுக்காக கொழும்புப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கி)

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம் ஈடு/1133

1. பெல்லின் ஞானப்பிரகாசம்,
2. பெண் லயிற்றா ஞானப்பிரகாசம்,
தேவாலயவீதி — யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிராக

1. மனுவல் கிறிசி, 85/6 மவுன்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

ஈடு/1133 ம் இலக்க வழக்கில் எனக்கு கொடுக்கப்பட்ட கோட்டுக்கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1981 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல் வட்டிரூபாய் 4400/- இன்னும் ரூபாய் 4000/-க்கு 21-8-79 துவக்கம் 15-10-80 வரைக்கும் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடம்ஒன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 545/5 சதம்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை "குடியிருப்பு வளவு" 11 2/9 குளியும், வீடும் மற்றும் ஆதனச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு மனுவல் அந்தோனிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் மேற்கு அந்தோனி மனுவல் பெண் சிசிலியாவின் ஆதனம் இதுடங்கலும்.

ப. நா. தர்மலிங்கம்
கொம்மிசனரும், ஏலவிற்பனையாளரும்.

127, வாடிகசாலை ஒழுங்கை,
கல்வியன்காடு 3ம் கட்டை,
பருத்தித்துறை றோட்,
14-9-81, யாழ்ப்பாணம். 0942

# 'ஆன்மீக சிந்தனைமூலமே மனோவலிமை, தெய்வபலம் கிட்டும்'

- வவனியா எம். பி.

(வவனியா)

"மனிதன் தேவஞானசம், தேவைகளைக் குறைத்து பற்றுக்களை அறுத்து பரம்பொருளின் மீது சிந்தனையைச் செலுத்தினுல் மனிதன் உயர்ந்த நிலையை அடைய முடியும். கலியுகத்தின் இறுதிக் கட்டமாகிய இப்போது உலகெங்கும் அநீதியும் அதர்மமும் தலைவிரித்து ஆடுகின்றன. இவைகளிலிருந்து மனிதர்களை மீட்பதற்காக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உலகில் தோன்றியுள்ளார். அவர் மீது சிந்தனையைச் செலுத்தினுல் நிம்மதியின்றி அல்லல் தொல்லைகளில் அழுந்தி உழலும் மனித ஜீவன்கள் நிம்மதியையும் சாந்தியையும் அடைய முடியும்"

இவ்வாறு ஈஸ்வரவிஸ்வாலய சங்கம் என்ற அமைப்பின் அங்கத்தினர்களான மூன்று சகோதரிகள் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்துள்ள இச்சங்கத்தின் ஆறு பிரம்ம சகோதரிகள் ஆன்மீகத்தையும் தெய்வ வலிமையின் மகிமையையும் பற்றி வவனியாவின் பல இடங்களிலும் மக்களுக்குப் போதித்து வருகிறார்கள்.

ஈஸ்வர விஸ்வாலயம் என்னும் இச்சங்கத்தில் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கும் இளம் ஆண்களும் பெண்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். இச் சங்கத்திற்கு இந்தியாவில் நானூறு கிளைகளும் வெளிநாடுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிளைகளும் உள்ளனவாம்.

கடந்த சனிக்கிழமை மாலை கோவில்குளம் ஸ்ரீ விஷ்னு ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை ஒன்றில் பிரம்ம சகோதரிகள் மூவரும் கலந்து கொண்டார்கள். வவனியா எம். பி. திரு, தா. சிவசிதம்பரமும் வவனியா அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. மு. சிற்றம்பலமும் இவ் விசேட பூசையில் கலந்து கொண்டார்கள். திரு சிவசிதம்பரம்பிரம்ம சகோதரிகளை வரவேற்றுப் பேசினர்.

"நாம் அல்லல்களின் மத்தியில் வாழும் இந்த நேரத்தில் எமக்கு அத்தியாவசியமான தேவையாகிய மனோவலிமையை, தெய்வபலத்தையும் ஆன்மீக சிந்தனையின் மூலம் பெறமுடியும். சாத்வீகத்திற்கு ஆன்மீகம் அவசியம். சகோதரிகளின் ஆன்மீகப்போதனைகளைப் பெற்று எம் மக்கள் யாவரும் மனோவலிமையையும் தெய்வபலத்தையும் பெற வேண்டும் என்று எம். பி. தமது பேச்சில் குறிப்பிட்டார். (அ)

## 3 வாடி...

(5-ம் பக்க தொடர்ச்சி)

களில் உள்ள வயல்களுக்கும் நீர் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள கூட்டுத்தாபனங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் யாவும் தகுதிஅடிப்படையில் மாவட்டஅபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் நிரப்பப்படவேண்டும் என்ற பிரேரணையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப் பிரேரணையை எதிர்ப்பதாக மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் (ஐ.தே.க.) தெரிவித்ததையடுத்து இப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இப் பிரேரணையை எதிர்த்து 2 வாக்கும், ஆதரித்து 3 வாக்கும் கிடைத்ததையடுத்து இப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. (அ)

# குருமணல் கந்தசாமி கோயில்

(அரியாலை)

புலோலி கிழக்கு குருமணல் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய ஆண்டின் நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. க. செல்லையாவும், உபதலைவராக திரு. பொ. பத்மநாதனும், செயலாளராக திரு. வி. விசுவலிங்கமும், உபசெயலாளராக திரு. வி. இராமச்சந்திரனும், பொருளாளராக திரு. சி. கிருஷ்ணரும், உபபொருளாளராக திரு. பொ. சிங்காரமும் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## சமயபாடக் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் 10ம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றலும் கற்பித்தலும் அடிப்படையிலான சமயபாடக் கருத்தரங்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபரும், கல்வித்திணைக்களத்தின் முலமான நிலையக் காரியதரிசியுமாகிய திரு. க. பாலச்சந்திரன் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது.

பலபாடசாலைகளின் மாணவ மாணவிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி விரிவுரையாளரான பண்டிதர் ஏ. பரஞ்சோதி சமய சம்பந்தமான கருத்துரைகள் வழங்கினர்.

சாரண ஆசிரியர் திரு. எஸ். நடராசா நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மரணசாதனமின்றி மரணமெய்திய காரைநகர் மேற்கு பலுகாட்டைச் சேர்ந்த கந்தையா சபாரத்தினம் என்பவரின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

கந்தையா குணரத்தினம், இல. 37, மில் வீதி, வவுனியா.

மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல. ரி 41

எதிர்

1. கந்தையா சபாரத்தினம் காம்பென் இராசலட்சுமி பலுகாடு, காரைநகர் தற்போது 54, ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா

பராய மடை யாதவர்கள் )
2. சபாரத்தினம் விஜயலட்சுமி,
3. சபாரத்தினம் தனலட்சுமி,
4. சபாரத்தினம் தனபாலன், மூவரும் பலுகாடு, காரைநகர் தற்போது இல. 54, ஸ்ரீகந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.

(2, 3, 4-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்களாதலால் தங்கள் வழக்குக் காவலன் 5-ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்)

5. தகை ஆய்வு அலுவலர், (புரூேபேஷன் ஒவ்விசர்) மாவட்டநீதிமன்றம், ஊர்காவற்றுறை
— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆட்சேபனையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி
1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10-ந் திகதி

கு. அருளானந்தம்,
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது.
த. சோமசுந்தரம்
மனுதாரரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. 0939

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

உத்தரவுபெற்ற வியாபாரம் உள்ள கடை, தளபாடங்கள், சிறிய வீடு, கிணறு ஆகியவற்றுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ச. இராசரெத்தினம் மான்பாடசாலை வீதி, டச்றோட், உடுவில் 0920

மானிப்பாய் பொன்னம்பலம் வீதியில் உள்ள 4 பரப்புக்காணி புதிய கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு: விபரங்களுக்கு திருமதி, கி. பாலசிங்கம், மணிக்கூட்டு வீதி (பிள்ளையார்கோவில் முன்பாக) யாழ்ப்பாணம். 0943

நல்ல நிலையிலுள்ள D. L. இற்ருலியன் மொடல் 6 சிறி 2201 லம்பிறற்றா, 3.5 பி. எஸ் ஏ. 1 சிறி 9215, ஹொண்டா C 90 ஆகியன விற்பனைக்குண்டு. யோகர், அம்பாள்கபே, நாச்சிமார் கோவிலடி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 0940

### பயிற்சி

வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வயறிங் வகுப்புகள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E. T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம், [சாந்தி சினிமாவிற்கு முன்] 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 0929

# திருத்தம்

திரு. ரி. மார்க்கண்டு யாழ் மாவட்டத்தின் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளராகவே நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 12-9-81ல் ஈழநாட்டின் 3ம் பக்கத்தில் யாழ் மாவட்டத்தின் புதிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக திரு த. மார்க்கண்டு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் திருத்தி வாசிக்கவும்.

# ஜனாதிபதியின் பிறந்ததினம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவின் 75வது பிறந்ததினத்தை நாடுமுழுவதிலும், சமய வைபவங்களுடனும், ஏனைய பொது நிகழ்ச்சிகளுடனும் கொண்டாட ஐ.தே. கட்சிக் கிளைகளும், சமூக சேவை ஸ்தாபனங்களும் முன்வந்துள்ளன.

ஜனாதிபதியின் பிறந்ததினத்தை சமய வழிபாட்டு நிகழ்ச்சிகளுடன் கூடியதாகத் தனது தொகுதி முழுவதிலும் கொண்டாடவிருப்பதாக கொழும்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், உணவு கூட்டுறவு பிரதியமைச்சருமான திரு. சந்திரராஜனும் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் பதினேழாந்திகதி இடம்பெறவிருக்கும் பிறந்ததினத்தில் முக்கிய நிகழ்ச்சிகளாக இரத்ததானம், அன்னதானம், சிரமதானம் போன்றவை ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதுடன், இத்தொகுதியிலுள்ள வயோதிபர் இல்லத்திலும், தொம்பே, ரதவன அரசாங்க வைத்தியசாலைகளிலும், உணவு உடை போன்றவற்றை அங்கிருப்போருக்கு வழங்கவிருப்பதாகவும், கொண்டாட்டக்குழுவினர் தெரிவித்தனர். (கி)

# கந்தபுராண விழா

(சாவகச்சேரி)

மீசாலை தென் ஸ்ரீ சித்திர வேலாயுதர் கோவில் கந்தபுராண பாராயண விழாஎதிர்வரும்வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

**மணிவாக்கு**

வறியவர்க்கு ஈதலும் அதனால் புகழ்உற வாழ்தலுமே உயிர்க்கு ஊதியம் ஆகும்.

—திருவள்ளுவர்

# நமது நோக்கு

## போதைப் பொருளுக்குப் பலியாகும் பேதைகள்

போதைப் பொருள் கடத்தலுக்கு இலங்கை கேந்திர ஸ்தானமாக விளங்குவது பலருக்கும் தெரியும்.

இந்த நிலையிலிருந்து, இங்குள்ள இளைஞர் உலகம் இப்பொருட்களுக்கே பலியாகும் நிலை பிரமாண்டமான பிரச்னையாக வளருகின்றதைப் பலர் அறியார்.

தொடக்கத்தில்கொழும்பு போன்ற பெருநகரங்களில் இந்தப் பழக்கம் அரும்பிவந்தது அரசாங்கத்துக்குத் தெரியவந்தது.

இன்று பல நகரங்களிலும் மலைநாட்டுப் பிரதேசங்களிலும் வாழும் வாலிபர் இதற்கு அடிமையாகுமளவில் இப்பொருட்கள் விலையாகின்றன.

மனோநிலையை மயக்கி ஒருவித உஷார் நிலையில் வைத்திருக்கும் சக்தி வாய்ந்த போதை வஸ்துக்கள் ஒரு வர்க்கம்; அந்த நிலைக்கப்பால் அதி தீவிரமானசெயல்களுக்காகவும் பயங்கர நிலையை உருவாக்கும் வஸ்துக்கள் இன்னொரு வர்க்கம்.

சட்டவிரோதமான செயலாக விருந்த போதும், போதிய தடுப்பு நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் இப்பொருட்கள் நடமாட்டம் நாட்டில் அதிகரித்து வருவதாக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

விலை குறைந்து வருவது இதன் விளைவு. அபின், கஞ்சா போன்ற பொருட்கள் நெடுங்காலமாக உபயோகத்திலுள்ளவை; இன்று புதிதாகக் காணப்படும் பொருட்கள் இவற்றிலும் காரமானவை; மோர்பைன் ஹெரொயின் கஞ்சாவில் போன்ற சர்வதேச பிரபலம் பெற்ற இவ்வஸ்துக்கள் இளைஞரைக் கவர்வது அதிசயமல்ல நிலைமை இன்னும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பது அதிசயம்.

விசாரணையிலீடுபட்ட பத்திரிகை நிருபர்கள், பொலிஸ் உளவறியும் பகுதிகள் இப்பழக்கம் இந்தியாவிற்கு அடிக்கடி பயணஞ் செய்யும் இலங்கையர், சிறப்பாக உயர்கல்விபயிலும் மாணவர்கள் மூலம் இங்கு பரவுகிற தென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சுமார் 24 வயதடைந்த நகரில் வாழும் வாலிபர்கள் பலர் நகர்புறத்தில் வாழும் இன்னும் பல சிநேகிதர்களுக்கு இத் தீங்கை அறிமுகப்படுத்துவதானால், நாட்டின் வருங்காலம் பாழாகிவிடு மன்பது திண்ணம்.

விற்பனை முயற்சிகளைத் தடுப்பதல்லாமல் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் வாழ்வைப் புனரமைக்கவும் பரவும் பழக்கத்தைத் தடுக்கவும் ஸ்தாபனரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மனநோயாளர் மருத்துவமனைகளில் இவர்களுக்குச் சிகிச்சையளிப்பதுதவிர்க்கப் படவேண்டியதென்பது நிபுணர்கள் முடிவு.

## ஏன் வளர்ந்தாய் பனைமரமே!

பாலர் வகுப்பில் படித்த பனைமரப் பாட்டு பாட்டாகவே இருக்கிறது; அது பட்டபாடுஎன்னவானாலும் இன்னும் நிற்பாட்டப்படவில்லை.

இந்தக் கற்பகத் தருவை காடாக வளர்த்து வைத்த நம் முன்னோரின் உள் உணர்வை இன்று நாம் நவீன விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கண்டு வியப்படைகின்றோம்.

பனை காடாக வளரும் பிரதேசங்களில் வதியும் மனிதர் பனைக்கென்றே பிறந்தவர்கள்! வேண்டுவார் வேண்டுவதே ['தை' அளவு] கொடுக்கும் பெருந்தன்மை கொண்ட இவ்விருட்சம், ஆண்டவனைப் போலத் தகாத வரங்களைக் கொடுக்க மாட்டாது. இவ்வாறு மனிதனைப் பாதுகாக்க வல்லது.

இடம்பட வீடிடவேண்டுமென்று திட்டம் போடும் பணக்கார வர்க்கம் பனையைத் தறிப்பதிலே இன்பம் காண்பார். இந்த நிலையில் ஏன் வளர்ந்தாய் பனைமரமே என்ற பாட்டு முஹாரியில் பாடப்படுகிறது.

நவீன முறையில் கட்டப்படும் வீடு, பட்டிக்காட்டுச் சூழலைக் குறிக்கும் பனையின் சாரலில் அமைவது அழகல்ல என்பது இன்றைய சித்தாந்தம் குறிப்பிட்ட பனையே வீட்டுக்கு உரமான கூரையாய் உதவுகின்றது. அதன் 'அநாகரிக தோற்றத்தை மறைக்க 'சீலிங்' இருக்கிறதே! மாற்றுவது இந்த மனப்போக்கை எவ்வாறு?

வீட்டை இக்கால நாகரிக முறைக்குக்கட்டி 'அசிங்கமான' பனை வெடுக்கை அகற்றி மேல்நாட்டு இலைகுழை வர்க்க மரங்களை நாட்டி, கிராமமே நகர வாழ்வைக் கட்டித் தழுவுகின்றது.

கிராமத்தை உய்யவைக்கும் பொருளாதாரத்தை 'தபால்கந்தோர்' அல்லது 'மணிஓடர்' பொருளாதாரமென்று குறிப்பிடப்பட்டு வந்தது

காலம் மாறிவருகிறது. 'நீவளர்ந்த காரணத்தை' நான் இப்போதாவது உணர வேண்டாமா? என்ற அவலம் தொனிக்கும் கேள்வியில் மீண்டும் பாட்டு ஆரம்பமாகிறது

மோட்டுமனிதா ''நீஇனி மேல்என்னுடைய பனையைத் தானும் தறிப்பதானால் அரசாங்கஅதிபரின் அனுமதியைப் பெறவேண்டும்''

இந்தக்கட்டளை ஒரு சுற்று நிருபம்மூலம் அரசாங்க அதிபர்களின் கட்டளையாக அமுல் செய்யப்படவிருக்கிறது.

பனம்பொருள் அபிவிருத்திச்சபையில் நாம் குறைகள் கண்டுபிடிக்கத் தயாராகவிருக்கின்றோம். இவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு பூரண ஆதரவுஅளிக்கவேண்டாமா?

வடமராட்சியில் திக்கத்தில் பனம்பொருள் கைத்தொழில் நிலையம், செம்பியன்பற்று என்னுமிடத்தில் பனைவள ஆராய்ச்சி நிலையம்- இவைபோன்ற துரிதமான நடவடிக்கைகள் பற்றியும் அவற்றின் சாதனைகள் பற்றியும் இறந்தகால நிகழ்கால வினைமுற்றில் செய்திகளை எதிர்பார்க்கின்றோம்.

---

### அண்ணாவின் 72-வது பிறந்த நாள்

## கண்ணீர்ப்பரிசு கேட்ட அண்ணாவின் கருத்துப் பெட்டகத்தில் சில துளிகள்

''உங்களது கண்ணீரை எனது கல்லறையின் மீது நீங்கள் சிந்துவீர்களேயானால் அதுவே எனக்கு நீங்கள் தரும் பெரும் பரிசாகும்''. இது பேரறிஞர் சி. என். அண்ணாதுரையின் 53 வது பிறந்த நாளில் அவருக்கு 53 வகையான பரிசில்களை அளித்த போது அவைகளையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு அவர் விடுத்த பாசவேண்டுகோள். 1969 இல் இவ்வேண்டுகோளை விடுத்து ஏழு ஆண்டுகள் பூர்த்தியடைவதற்குள் அண்ணா அமரரானார். தமிழ் கூறும் நல்லுலகின் கண்ணீர் வெள்ளத்தால் நனைந்தது மரீனாபீச் அண்ணா சமாதி. ''விதியே தமிழ்ச் சாதியை எவ்வகை விதித்தாய்'' எனப் பாரதி கேட்ட கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனுமே கேட்டான். நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்த்தான் பாரதமாதாவுக்கு விடுதலை தரவந்த கண்ணன், பாரதியின் கண்களுக்குத் தோன்றினான். ஆனால் ஏழையாய், ஆசிரியனாய், எழுத்தாளனாய், பேச்சாளனாய், போராட்ட வீரனாய், கலைஞனாய், அரசியல் தலைவனாய், பாசம் நிறை அண்ணாவாய் எல்லாம் பல கோலங்களைக் காட்டினான். தாழ்வுற்ற தமிழகத்தின் தளர்வு போக்கவந்த திராவிடத்தானைத் தளபதி பேரறிஞர் அண்ணா அவ்வேளையில்தான் சமுதாய அரசியல் பொருளதாரச் சகதியிலிருந்து தமிழ் மக்களை வெளியே இழுத்துக் கொண்டிருந்த அண்ணாவின் கைகள் காலனால் செயலிழக்கச்செய்யப்பட்டன. அன்று முதல் இன்றுவரை எத்தனையோ சந்தர்ப்பங்களில் 'அண்ணா இருந்திருந்தால் இருந்திருந்தால்' என ஏங்கி ஏங்கியே செத்துக்கொண்டிருக்கிறது தமிழ் கூறும் நல்லுலகு. இவ்வேளைகளில் அவனது சிந்தனை எழுத்துக்களே தமிழ் உலகின் கவலைக்கு ஆறுதல் மருந்தாவதும் உண்டு. அப் பெருமகன் காஞ்சியிலே பிறப்புற்ற செப்டெம்பர் 15 ஆகிய இப் புனித தினத்திலே அவனது சிந்தனைகளில் சில துளிகளை எமது இதயத்துள் தெளிப்பதே அண்ணாவுக்குநாம் செய்யக்கூடியநன்றியாகும்.

### இயக்கம்பற்றி

''பெரியமரங்களை மாளிகை மண்டபத்துக்குத் தூண்களாக அமைத்துவிட்டால் மட்டும் போதாது மிகமிகச் சாதார 'செல்' [கறையான் ]மரத்திலே சிறு துளைகளிலே புகுந்து கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும். செல் அரிக்க ஆரம்பித்துவிட்டால் செம்மரமும் சரி, எம்மரமும் சரி கெடும். அவ்வாறே ஓர் இயக்க அமைப்பும் கெடும்''.

### தலைவனும் அணிவகுப்பும்

ஐரோப்பாக் கண்டத்தில் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே புனிதபோர் ஒன்று நிகழ்ந்தது. ஏசு பிறந்த ஜெருசலேமிற்குள் கிறிஸ்தவர்

**- பற்றிமாகரன் -**

கள் நுழையக்கூடாது என்று இஸ்லாமியர் கூறியதாலேயே அப்பயங்கரச்சண்டை நிகழ்ந்தது.

''இஸ்லாமியருக்குத் தலைமை வகித்துப் போர் நடத்தினான் சாலடி மன்னன். ரிச்சர்டு என்பவன் கிறிஸ்தவர்களுக்குக்குத் தலைமை தாங்கினான். ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் மீது போர் நிறுத்தம் ஏற்பட்டது. எல்லாக்கிறிஸ்தவர்களும் ஜெருசலேமுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டது ஆனால் ஒரு நிபந்தனை என்றான் சாலடி மன்னன். கிறிஸ்தவர்களின் தலைவனான ரிச்சர்டு மட்டும் உள்ளே வரக்கூடாது என்பதே அந்நிபந்தனை.

''அதே போல் நான் வெளியே நிற்கின்றேன் என் அணிவகுப்பு உள்ளே செல்கிறது. தலைவன்இல்லாது அணிவகுப்பு அமைக்க முடியும். ஆனால் அணிவகுப்பு இல்லாது தலைவனை அமைக்க முடியாது. என் தோல்வியைப்பற்றி வருந்துபவர்களுக்கு இதைத்தான் சொல்லிக் கொள்கிறேன்.'' (தேர்தலில் அண்ணா தோல்வியுற தி. மு. க உறுப்பினர் வென்றபோது அண்ணா பேசியது)

### சாதியினால் சமூகம் சின்னாபின்னம்

''பார்ப்பனீயத்தின் பலனாக சாதி பேதங்களால் ஒரு பெரிய திராவிட சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப்போய்க் கிடக்கிறது. பிறர்க்கு அடிமைகளாக, பேசும் ஊமைகளாக, நடைப் பிணங்களாகப் போய்விட்டனர். தகப்பனுக்கு மேகவியாதி இருப்பின் பிறக்கும் குழந்தை குருடாகவும் பிறக்கலாம் என்பர் மருத்துவ நூல் கற்றோர். குருட்டுக் குழவிக்கு குவலயத்தின் குதூகலக் காட்சி எங்ஙனம் தெரியும்? அதுபோல்தான் திராவிட சமுதாயம் பார்ப்பனீயம் என்னும் மேக நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறது. பிறக்கும் திராவிடன் குருடாகிறான்.''

### நாடும் நினைப்பும்

திருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படி இருக்கும். எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ அந்த அளவு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்! ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்குகிறது. உன்னத நிலையில் உள்ள ஒரு நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும். தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும்.

---

## மல்லிகை ஆண்டு மலர்

மல்லிகை 17வது ஆண்டு மலர் அழகுற மலர்ந்து இலக்கிய மணம் வீசிக் கொண்டிருக்கிறது பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவாவை ஆசிரியராகக் கொண்ட மல்லிகையின் ஆண்டு மலர் 120 பக்கங்களில் தரமான சிறுகதைகள் கவிதைகள் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

ரமணியால் தீட்டப்பெற்ற அழகிய அட்டைப் படத்துடன் விளங்கும் இம்மலர் வாசகர்களுக்கு அரிய விருந்து என்று கூறக் கூடிய அளவுக்குச் சிறப்புடையதாக உள்ளது.

பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரும் நா. சுப்பிரமணியம், கே. எஸ். சிவகுமாரன், முருகையன், என். அகஸ்தியர், சபா. ஜெயராசா, பிரேம், ஜீ. செங்கை ஆழியான், திக்குவல்லைகமால், சி. மௌனகுரு, தெளியான் ஆகியோரும் மற்றும் பல எழுத்தாளர்களும் இம் மலரின் சிறப்புக்குத் தம் ஆக்கங்களை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தொடர்ந்து வெளிவரும் ஒரு தமிழ் இலக்கிய சஞ்சிகையின் 17வது ஆண்டு மலர் என்ற தனிப்பெருமையும் இதற்கு உண்டு.

''இளங்கோ''

---

## ''இறைஅருளை வேண்டி அழுபவன் கடவுளின் அன்புக்குரியவன்''

(மட்டுவில்)

''பாலில் நீரை ஊற்றினால் பாலும் நீரும் இரண்டறக் கலந்து விடும் ஆனால் பாலிலிருந்து தயிர் எடுத்து அதிலிருந்து வெண்ணை எடுத்து அதைத் தண்ணீரில் போட்டால் அது தண்ணீருடன் கலக்காது. தண்ணீரில் நீந்திக்கொண்டே இருக்கும். ஆத்ம சாதகன் ஒருவனுடைய நிலையும் இத்தகையானதே. தெய்வீக வழியில் ஈடுபட முன்பு அவன் உலகத்தாருடன் கலந்து அவர்கள் வழியில் செல்வான். தெய்வீகத்தில் ஈடுபட்டு பக்தி ஞானம் அடைந்தவன் லௌகிக விஷயங்களில் மூழ்கி விடமாட்டான்''

இவ்வாறு மட்டுவில் கல்வத்துப்பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சியில் பண்டிதர் தம்பையா பேசுகையில் கூறினார்.

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ அ விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பண்டிதர் தம்பையா தொடர்ந்து பேசுகையில் 'இரும்புதங்கம் வெள்ளி ஆகிய உலோகங்களைத் திரும்பத் திரும்பக் காய்ச்சுவதனால் அவை புடம்போட்ட பொருட்களாகப் பரிமளிக்கின்றன. அதே போன்று இறைவன் கருணை வேண்டிக் கடவுளின் ஆலயத்தில் அழுது அழுது தொழுவதின் மூலம் அவன் உள்ளத்து மாசுகள் நீங்கப் பெற்று இறை அன்புக்குரியவனாகிறான்'' என்றார். [அ]

---

## ''வணங்குவோர் ஆர்வத்தினாலேயே கோவில்கள் சிறப்புறுகின்றன''

(சாவகச்சேரி)

''ஈதலாகிய செயலைத் தொன்றுதொட்டே மிக ஆர்வத்துடன் செய்துவந்த பதியாகவின் ஈவினை என்று இக்கிராமம் வழங்கப்படுகின்றது. ஈதல் கொடுத்தல், வினைசெயல்; அத்தகைய நன்மைகளின் மத்தியில் கோயில் கொண்டருளிய கற்பகவிநாயகராலயமும் பூர்வீகமான சந்திரசேகர முகூர்த்தம். நல்ல விளைநிலங்களும் பூலோக கற்பகதருவாகிய பனஞ்சோலைகளும் நிரம்பியமையால் அன்னதான வைபவங்கள் இன்றும் பெருமளவில் நடாத்தப்படுகின்றன''.

இவ்வாறு புன்னாலைக்கட்டுவன் கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள ஈவினை கற்பக விநாயகராலய ஆண்டுற்சவத்தின் போது பேசிய ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினார்.

சிவஸ்ரீ கி. கெங்காதரக்குருக்கள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறியதாவது;

''வணங்குபவர்களின் ஆர்வத்தினாலேதான் இத்தகைய கோயில்கள் சிறப்புறுகின்றன. முறையான கலாசேஷத்திரங்களாகக் கோயில்கள் விளங்கின. நடனம், இசை, பண், விரிவுரைகள், பஜனைகள் இவற்றால் அவ்வூர் மக்கள் சகலரும் முன்னேற வாய்ப்புண்டு. இதனாலேதான் கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டாமென்ற பேச்சு வழக்கில் வந்தது.

சிவஸ்ரீ தி. கேதீஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

ஈரானிய குண்டு வெடிப்புகள்:

# பாதுகாப்பு செயலாளரின் சதிவேலையே காரணம்

## அரசாங்க வழக்குத் தொடுநர் அறிவிப்பு

தெஹ்ரான், செப். 14 ஈரானில் கடந்த மாதம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு அந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் திரு. மசூர் கெஷ்மீரின் சதிவேலையே காரணமாகுமென ஈரானின் அரசாங்க வழக்குத் தொடுநர் அறிவித்துள்ளார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது பாதுகாப்புச் செயலாளர் கெஷ்மீர் பலியானதாக அறிவிக்கப்பட்டபோதிலும் பின்னர் அது அவரின் சடலம் அல்லவென அடையாளம் காணப்பட்டது.

அச்சடலம் ஈரானிய சிறைத்துறை அதிபரின் சடலமென பின்னர் தெரியவந்தது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈரானிய ஜனாதிபதி முகமட் அலி ராஜாயையும், பிரதம மந்திரி பஹானோரும் பலியானது தெரிந்ததே. (வெ)

### விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டம்

பொன், செப். 14 அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் நேற்று மேற்கு ஜேர்மனிக்கு விஜயஞ்செய்தபோது அவரின் விஜயத்தை எதிர்த்துப் பலர் விமானநிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் பலர் காயமடைந்தனர். (வெ)

பாக், அதிபருக்கு

### யுத்தவிமானங்கள் உடன் தேவையாம்

இஸ்லாமபாத், செப். 14 எப்-16 நவீன யுத்த விமானங்களை உடனடியாக வழங்குமாறு பாகிஸ்தான் அதிபர் ஜனாப் ஷியாவுல் ஹக் அமெரிக்காவைக் கேட்டுள்ளார்.

இந்த விமானங்களை ஒரு வருடத்திற்குள் எதிர்பார்ப்பதாகவும் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ராணுவ உடன்படிக்கை எதுவும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார். (வெ)

சோவியத்தில்

### பெற்றோல் விலை அதிகரிப்பு

மாஸ்கோ, செப். 14 சோவியத் யூனியன் பெற்றோலின் விலையை இரு மடங்காக அதிகரிக்கவுள்ளது. ஒரு கலன் பெற்றோலின் விலை 1.2 டொலரிலிருந்து 2.3 டொலராக அதிகரிக்கப்போவதாக சோவியத் அரசு அறிவித்துள்ளது.

ரஷ்யர்கள் பெருமளவில் அருந்தும் வொட்கா மதுபானத்தின் விலையையும் 20 சத வீதம் அதிகரிக்கப்போவதாகவும் சோவியத் அரசு அறிவித்துள்ளது. (வெ)

பாரம்பரியங்களைப் பாதுகாக்க

## 'பலதுறைகளிலும் நூல்களைப் படைக்க வேண்டும்'

### கவிதை வெளியீட்டு விழாவில் வவனியா எம். பி.

(வவனியா)

"இலக்கியம் என்றால், இலக்கையும் இனிமையையும் கொண்டது. அதில் ஈடுபட்டவர்களை அது தன் மயமாக்கிக் பிறருக்காக வாழவும் தொண்டுகள் செய்யவும் தூண்டும். இந்த வகையில் 21 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு அறிமுகமாகிய சமூகத் தொண்டரும் பிறவிக் கவிஞருமாகிய க. ச. கந்தசாமியின் குழந்தைக் குரல் நூலை இங்கு வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" இவ்வாறு குழந்தைக்குரல் நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் செவிப்புலனை இழந்த நண்பரின் கவிதைகள் சிறியதான நூல் உருவம் பெற்று வெளியானாலும் இது ஒரு பெரிய சாதனை என்றே கூற வேண்டும். எதுகை மோனையும் கருத்துச் செறிவும் கொண்ட அழகிய பாடல்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது என்றார்.

சமூகத் தொண்டு செய்யும் விவசாயி ஆகிய இவரால் கவிதைகள் படைக்கப்பட்டு நூலுருப் பெறும் இக்கால கட்டத்தில், இலக்கிய வட்டம் சுதந்தரனந்த இந்து இளைஞர் சங்கம் போன்ற அமைப்புக்களில் உள்ள இலக்கிய ஆர்வம் கொண்ட இளைஞர்களும் சமுதாயத்திற்கு உழைப்பவர்களும் இது போன்று பயன்படப்பட்ட நூல்களைப் படைத்து வெளிக்கொணர முன்வர வேண்டும் என்று அவர்மேலும் தெரிவித்தார்.

எமது பாரம்பரியம் கலை கலாசாரம் அழிந்துபோகாமல் இருக்கவும் மறைக்கப்பட்டு திரித்துக் கூறப்படாமலும் இருப்பதற்காக சரித்திரம் படைக்கவும் சமூகத்தின் பல துறைகளிலும் நூல்களைப் படைக்க எமது இளைஞர்கள் முன்வர வேண்டும்" என அவர் கேட்டுக் கொண்டார்.

நூலின் முதல் பிரதியையும் எம். பி. பெற்றுக் கொண்டார். நூல் ஆசிரியர் நூல் உருவாகிய வரலாற்றைத் தெரிவித்தார்.

திரு. தியாகராசா, சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. பொ. கனகரட்னம்,

(5-ம் பக்கம் பார்க்க)

# சதாத்திற்கு எதிராக

## சோவியத் சதிமுயற்சி

### எகிப்து குற்றச்சாட்டு

கெய்ரோ, செப். 14 எகிப்திய ஜனாதிபதி சதாத்தின் ஆட்சியைக் கவிழ்க்கச் சோவியத் யூனியன் முயன்று வருவதாக எகிப்து குற்றஞ் சாட்டியுள்ளது.

ஜனாதிபதி சதாத்தின் ஆட்சியைக் கவிழ்க்க, சோவியத் யூனியன் மேற்கொண்ட சதி முயற்சி ஒன்று எகிப்திய இரகசியத் தகவல் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சதாத்தின் கட்சிப பத்திரிகையில் இச்சதித் திட்டத்தின் முழு விபரமும் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (வெ)

கருணாநிதி உறுதியளித்தால்

# கைதான தி. மு. க. வினர் விடுதலை செய்யப்படுவர்

## எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, செப். 14 "சென்னையில் உள்ள இலங்கைத் துணைக்கைஹமிஷனுக்கு முன்னால் மறியல் போராட்டத்தை நடத்தப்போவதில்லையென்று தி. மு. க. தலைவரோ, தொண்டர்களோ உறுதியளித்தால் இதுவரை கைது செய்யப்பட்ட எல்லாத் தி மு க தொண்டர்களையும் தமிழ்நாடு அரசு விடுதலை செய்யும்."

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

"இலங்கைத்தமிழர் பிரச்னை சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட தி மு க தொண்டர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று கோரிச் சென்னையிலும், ஏனைய மாவட்டங்களிலும் மறியல் போராட்டம் நடத்தப்போவதாகத் தி மு க முன்னர் அறிவித்திருந்தபோதிலும் இம்முடிவு கைவிடப்படலாமெனப் பின்னர் வந்த செய்திகள் கூறின.

இதேசமயம் ஏற்கவே கைதுசெய்யப்பட்டுள்ள தி மு க தொண்டர்கள் விடுதலை செய்யப்படும் பட்சத்தில் தமது கழகம் நடத்தத் திட்டமிட்டுள்ள ஆர்ப்பாட்டங்கள் தாமாகவே கைவிடப்படுவது சாத்தியமே என்ற வகையில் திரு. கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளதாக ஒரு செய்தி கூறியது. (வெ)

# பாவனையாளர் பாதுகாப்பு: விளக்கமளிக்கக் கருத்தரங்கு

(புலோலி)

பருத்தித்துறைப் பாவனையாளர்களின் நன்மைகருதி பாவனையாளர் பாதுகாப்பு சம்பந்தமான விளக்கங்களை அளிக்கும்முகமாகக் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு பருத்தித்துறைப் பாவனையாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

இதற்கு முன்னோடியாக பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள், கிளைக் குழுக்களின் உறுப்பினர்கள், சங்க ஊழியர்களுக்குப் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைப் பேணவேண்டிய அவசியம்பற்றி விளக்குமுகமாக இம்மாத இறுதியில் கருத்தரங்கொன்று நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளரும் யாழ்மாவட்ட அபிவிருத்திசபை உணவு கூட்டுறவுத்துறை குழு அங்கத்தவரும் திரு. ரீ. மார்க்கண்டு, பருத்தித்துறைப் பாவனையாளர்சங்கத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் உட்பட பலர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.



நிகர அளவு 450 மி. லீ. சில்லறை விலை ரூ. 37-50

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30
CONVOY

ராகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி
பைரவன்

கடைசி வாரம்
ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சத்யராஜ்-சுஜாதா
தூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
சிவகுமார் - லட்சுமி
அவன்-அவள்
அது (ஈஸ்ட்மன்கலர்)

லிடோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும்
அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
ஜெமினி-சாவித்திரி-தங்கவேலு-பாலையா
இன்று மட்டும்
கடன்வாங்கி கல்யாணம்
— புதிய பிரதி —
18-9-81—கமலஹாசன்...... "குரு"—

கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

சுழந்த எம். ஜி. ஆர். காமினியின் அற்புத நடிப்பைக்
காண இன்னும் சில தினங்கள் மட்டும்.
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா - சாவித்திரி - மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம் புதிய பிரதி
கற்பகம்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

4-வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

20-th Last Day
REGAL றீகல் DAILY 5 SHOWS
புரூஸ்லியின் சாகஸம்.
FIST OF FURY
—"புரூஸ்லி கொல்லப்பட்டான் ஆகியதன் மர்மம் என்ன,!
அவன் கொலை செய்யப்பட்டனர் ஆபிரக்கணக்கில்...

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 30-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(15 - 9 - 81)

மேடம்: அதிக சிந்தனை சிறிய தலைபிடியைக் கொடுக்கும் உடல்நலம் பாதிக்கப்படலாம் வீண் பொருள்களினால் பணம் விரயமாகும். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

இடபம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும் மேலிடத்துச் செல்வாக்கில் பாதிக்கப்படலாம். அயலவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளவும்.

மிதுனம்: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள் பொருள் வரவுக்கும் இடமுண்டு. இல்லத்தில் திருப்திகரமான நிலை ஏற்படும் முன்னேற்றமுண்டு.

கடகம்: அறவழியில் நாட்டம்பிறக்கும் தாராள சிந்தை மேலிடும். குடும்பத்தில் சுமுகமானசூழ்நிலை தென்படும். எதிர்பாராத காரியம் இன்று வழிகோலப்படலாம்.

சிம்மம்: அறிஞர் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

கன்னி: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிரிவு நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

துலாம்: கீர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும் போக்குவரத்து விடயத்தில் கவனம் செலுத்தவும் திடீர் திருப்பம் உங்களைத் திகைக்க வைக்கலாம்.

விருச்சிகம்: தாம்பத்தியவாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், கலைத்துறை வழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு. புண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

தனு: பிரிந்து பேசியவர்கள் இன்று சிறிதுமூவார்கள் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அனுபவிக்க நேரிடும் இலகுக்கு பதவி ஏற்றம் தடை.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சிக்கு இழுத்துச்செல்லும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம்பிறக்கும்.

கும்பம்: வெற்றிப் பாதையில் விரைந்தோடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

மீனம்: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல்கிட்டும் தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# பயணப் பெட்டியில் கஞ்சா

(ஹாலிஎல)

நாகரிக வாலிபரின் விலையுயர்ந்த பயணப் பெட்டியில் 70,000 இரெய்ன் கஞ்சா இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மொனருகலையைச் சேர்ந்த ஆர். எம். ரத்நாயக்கா என்ற வாலிபரே மேற்படி கஞ்சா வைக்கொண்டுசென்ற சந்தேக நபராவார்.

சந்தேக நபரைக் கைது செய்த கான்ஸ்டபிள் கூரே பதுளை நீதவான் திரு. ஜோர்ஜ் அத்துருபான முன்னிலையில் ஆஜர் செய்தார். சந்தேகநபர் பற்றி விளக்கிய கான்ஸ்டபிள் கூரே இவ்வாலிபர் கஞ்சாவை திருகோணமலைக்குக் கடத்தவரெனவும் அங்கேயே இவற்றினுக்கு அதிக தேவையிருப்பதாகவும் தெரிவித்தார்.

நீதவான் மேற்படி சந்தேக நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (கி)

நீர்ப்பாசன இலாகா

# மென்பந்து கிரிக்கட் போட்டி: வவனிக்குள பிரிவு வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாண நீர்ப்பாசன இலாகாவினால் யாழ்ப்பாணப் பிராந்திய நீர்ப்பாசன பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 25 ஓவர் மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் வவனிக்குளப்பிரிவு, கிளிநொச்சிப் பிரிவை 40 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக திரு. எஸ். சிவகாந்தனும், சிறந்த பந்து வீச்சாளராக திரு. எம். ஏ. நவரத்தினமும் சிறந்த ஆல்றவுண்டராக திரு. எஸ். அன்பழகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அரியாலை சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை இலாகா பிரதான கணக்காளர் வழங்கினார்கள்.

போட்டிக்கு நிருவாளர்களாக வி. செங்காதரன், எஸ். வேலுப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

# 3 வாடி வீடுகளை மன்னார் அ. வி. சபை கையேற்கும்


(மன்னார்)

மன்னார், தள்ளமன்னார், மடு ஆகிய இடங்களில் உள்ள வாடி வீடுகளை மாவட்ட அபிவிருத்திச் சபை ஏற்று நடத்துவதென மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை தலைமையில் கூடிய போது தீர்மானிக்கப்பட்டது. மாவட்டஅபிவிருத்திசபை உறுப்பினர் திரு. கைலாசபிள்ளையினால் இப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

நீர்ப்பாசனம் சம்பந்தமான ஒரு பிரேரணை மீது உரையாற்றிய மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் பேசுகையில் கட்டுக்கரை குளத்திலிருந்து ஆரம்பத்தில் 15 ஆயிரம் ஏக்கருக்கே நீர் பாய்ச்சப்பட்டது. இப்போது 35 ஆயிரம் ஏக்கருக்கு நீர் வழங்கப்படுகிறது. ஏக்கருக்கு 20 ரூபா வீதம் 15 ஆயிரம் ஏக்கருக்கு நீர் வரி அறவிடப்பட்டு வந்தது. இப்போதும் 15 ஆயிரம் ஏக்கருக்கே நீர்வரி அறவிடப்படுகிறது. மிகுதி 20 ஆயிரம் ஏக்கருக்கு நீர்வரி அறவிடப்படுவதில்லை. இதனால் வரிமூலம் கிடைக்கும் வருவாய் குறைந்துள்ளது. இதனால் நீர் வாய்க்கால்களுக்குச் செலவிடும் தொகையும் குறைவாகவே 'செலவிடப்படுகிறது'' என்றார்.

இதனையடுத்து இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதுடன் கற்கடந்தகுளம், இரணைத் தாழ்வு ஆகிய பகுதி

(2ம் பக்கம் பார்க்க)



# மனைவிளக்கு

அமரர் திருமதி ஆரோக்கியம் வரப்பிரகாசம் அம்மையாரின்மறைவு இறப்பாக இளாலி மக்களுக்குப் பேரிழப்பாகும். "உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" என்ற இறைவனின் அமுதமொழியைக் கடைப்பிடித்து வாழ்ந்ததினால் மாந்தர்களுக்கு அணையாத ஒரு மனைவிளக்காக அன்னார் திகழ்கிறார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்பதற்கு இலக்கணமாய், மனைமாட்சியில் மிக்க சிறப்புடையவராய் இல்லத்திற் கோர் மகாலட்சுமியாய் விளங்கியவர் ஆரோக்கியம் அம்மா.

அன்னவை இளம் வயதிலே இழந்த இளாலி ஆத்மஜோதி அருட் சகோதரர் எஸ். ஏ. பிரான்சிஸ் அடிகளை உருவாக்கி வைத்தவர் அமரர் ஆரோக்கியம்மா.

அன்பும் பண்பும் அறமும் பொலிந்து பாவலரும் நாவலரும் கற்றவரும், கல்லாதவரும் புகழ எல்லோரிடமும் தன்னதாக அணைத்துயிர் துயரம் தன்னதாகமதித்து இரப்பவருக்கு ஈந்தும் விருந்தினரை யோம்பியும் பெண்மைக்கு இலக்கணமாய் விளங்கியவர் அமரர் ஆரோக்கியம்மா.

அவரது மறைவு அவரை அறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் நெகிழச்செய்து விட்டது. இறைவனின் சித்தத்தை யார் அறிவார்? இறைவன் ஆரோக்கியம்மாவை அழைத்துவிட்டார். 12-9-81ல் இளாலி புனித யாகப்பர் பேராலயத்தில் அவரின் ஆன்ம சாந்தியடையத் திருவிருந்துப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரது அன்புப்பணி அவர்களின் உள்ளத்தைவிட்டு என்றும் அகலாது.

—ரேச் துரையப்பா

# இ. அ. சபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அல்வைப்பிட்டி கிராம அபிவிருத்திச்சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை மாலை சங்க மண்டபத்தில் திரு. செ. தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விசேஷ அதிதிகளாக உ. அ. அதிபர் திரு. ஆ. குணநாயகம், கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பி. தவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (கு)

# ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(புலோலி)

இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் சனசமூக நிலையத்தினதும் ஆண்டு விழாவும் விளையாட்டுப்போட்டியும் இம்மாதம் 16ம் திகதி இன்பருட்டி கடற்கரை மைதானத்தில் அதிபர் திரு என். சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு எம். தம்பிமுத்து பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கலைநிகழ்ச்சிகளும்இடம் பெறவுள்ளன. (அ)

# பாரம்பரிய...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி பார்வதி நல்லதம்பி திருவாளர்கள் எஸ். ஜி. நாதன், சோதிலிங்கம், சே. இராசசுந்தரம், பண்டிதர் வைத்தியா ஆகியோர் நூலாய்வுரை நிகழ்த்தினார்கள்.

# சட்டவிரோத மரம் வைத்திருந்த இருவர் கைது

(புலோலி)

உத்தரவுப் பத்திரமின்றி வைத்திருந்த சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காட்டுமரப் பலகைகளும் தீராந்திகளும் பருத்தித்துறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இச் சம்பவம் தொடர்பாக இருவரைப் பொலிசார் கைது செய்தனர்.

புலோலியிலுள்ள வீடொன்றில் பெருந்தொகையான உத்தரவுப்பத்திரமற்ற காட்டு மரப்பலகைகளும் தீராந்திகளும் இருப்பதாக பருத்தித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சிற்றம்பலம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் பிரஸ்தாப வீட்டில் இருந்த காட்டுமரப்பலகைகளையும், தீராந்திகளையும் கைப்பற்றியதுடன், இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணையின் பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட மரப்பலகைகளும் தீராந்திகளும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# வயோதிபரை மோதியபின் குடைசாய்ந்த லொறி

(சுண்டிக்குளி]

பாம்புபோன்று வளைந்து வளைந்து ஓடிய லொறியொன்று வீதியருகில் நின்ற வயோதிபர் ஒருவரை முட்டித்தள்ளி வீதிக் கானுக்குள் விழுந்து குடைசாய்ந்தது.

நேற்று முன்தினம் யாழ். மூஸ்லிம் வீதியில் நடைபெற்ற இவ் விபத்தில் சிக்கிய வயோதிபர் திரு. எம். எஸ். எம். மூகைடீன் பலத்த காயத்துடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வீதி ஓரத்தில் நிற்பாட்டி வைக்கப்பட்டிருந்த லொறியை யாருக்கும் தெரியாமல் சாரதி லைசென்ஸ் இல்லாத இளைஞர் ஒருவர் செலுத்திய காரணத்தினாலேயே இவ்விபத்து நடைபெற்றதாக தெரிய வந்தது.

இது சம்பந்தமாக பொலிசார் சந்தேகத்தின்பேரில் சின்னத்துரை பத்மநாதன் என்ற 17 வயது இளைஞனைக் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

மேற்படி லொறியைப் பரிசோதனை செய்த மோட்டார் வாகனப் பரிசோதகர் அதில் ஒரு காருக்குரிய லைசென்சும், வாகன இலக்கமும் இருப்பதாகவும், ஒரு காரே லொறியாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து வீதியில் ஓடத் தடை விதித்துள்ளரர்.

இவ் விபத்து சம்பந்தமாக திரு. எஸ். தேவசகாயம், திரு. எஸ் தவராசா ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் புலன் விசாரணை செய்து வருகின்றனர். [அ]

## நன்கு திட்டமிட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் பதினேழாந் திகதியிலிருந்து நாடு முழுவதிலும் அமுலுக்கு வந்த அவசரகாலச் சட்டம் இன்றுடன் செயல் இழக்கும்,

அவசரகால அமுலின்போது எதுவித பெருங் குற்றச் சம்பவங்களும் இடம்பெறவில்லை யென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. [கி]

## கடல் கடந்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யொட்டி யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

"தம்பியுடையான் பகைக்கு அஞ்சான்" என்பது அடிக்கடி அறிஞர் அண்ணாவால் பகரப்படும் அவருக்கு மிகவும் பிடித்தமான ஒருவாசகமாகும். என்னதான் தமக்குள்ளே முட்டிமோதிக்கொண்ட போதும், அண்ணாவின் திருவாக்குக்கு ஒப்ப அண்ணாவின் அருமைத் தம்பியான தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களும், எதிர்க்கட்சி முதல்வரான டாக்டர் மு கருணாநிதி அவர்களும் ஏனையோரும் அண்ணாவின் வழியிலே இணைந்து இப்போதும் இலங்கைத் தமிழர் இன்னல் துடைப்பதற்காக அண்ணாவழியிலே பேரணிகளையும், அறப்போராட்டங்களையும் நடத்தி வருவதும், மேற்படி நடவடிக்கைகள் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்னைகளுக்கு உலக அந்தஸ்து தேடித்தர முயன்றுவருவதும் யாவரும் அறிந்ததே.

ஆறு கோடி உலகத் தமிழர்களையும் ஒன்றாக இணைப்பதே அறிஞருக்கு உலகத் தமிழர்களாகிய நாம் செய்யக்கூடிய கைம்மாறாகும். உலகில் தமிழன் உள்ளளவும் அறிஞர் அண்ணாவின் நினைவு ஞாலத்தில் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை என்று திரு விசுவநாதன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் இன்ஸ் மூடப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள உல்லாச விடுதியான யாழ். இன்ஸ் மூடப்படவுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகாலமாகச் சிறந்த சேவையாற்றி வந்த இவ்விடுதி அரசின் இலக்குத்தகைக்காலம் காலாவதியாவதையடுத்தே மூடப்படவுள்ளது.

யாழ். நகரிலுள்ள ஒரு உல்லாசவிடுதி நிர்வாகக் கஷ்டம் காரணமாக மூடப்படுவதாக நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளியானசெய்தி தவறு என்றும் இல்லத்தில் குத்தகைக் கலம் முடிவடைவதையடுத்தே இதுமூடப்படுவதாகவும் நகரில் பொருத்தமான வேறு கட்டிடம் கிடைக்கும்பட்சத்தில் யாழ். இன்ஸ் சேவையைத் தொடர்ந்து நடத்த ஆவத்தமாயுள்ளதாயும் யாழ் இன்ஸ் உரிமையாளர் தெரிவித்தார்.

[வவனியா]

வவனியா அபிவிருத்திசபைக் கெனத் தனியான இலச்சினை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பண்டாரவன்னியனின் உருவத்தையும் இரண்டு வாள்களையும் கொண்டுள்ள சின்னமே இலச்சினையாக இருக்க வேண்டுமென்று சபையில் அபிவிருத்திச்சபைதலைவர் திரு. மு. சிற்றம்பலம் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதகா ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## அரசு-கூட்டணி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சுவார்த்தைகளின் போது மூன்று முக்கிய அம்சங்களில் இரு தரப்பினருக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டிருந்தது.

∴ அமைதித்தீர்வு காணும் வகையில் சர்ச்சைக்குரிய விஷயங்கள் பற்றி ஆராய்வதற்கென ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்தன தலைமையில் பிரதமர், மற்றும் அமைச்சர்கள், கூட்டணி தலைவர்களைக்கொண்டு உயர்மட்டக் குழுவொன்றை அமைப்பது.

∴ நாடு முழுவதும் சகலவிதமான வன்செயல்களையும் களையும் வகையில் சகல கட்சிகளதும் ஒத்துழைப்புக்குவழி செய்வது.

∴ அபிவிருத்தி சபைகளைத் திருப்திகரமாகச் செயல்படும் வகையிலானமுயற்சிகளைத் தீவிரப்படுத்துவது.

இம்மூன்று அம்சங்களிலுமே ஏற்கனவே இணக்கம் காணப்பட்டுள்ளது.

நாளைய கூட்டத்தில் ஆராய்வதற்கான நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றியும் முடிவுகளை செயலாக்குவது பற்றியும் நாளை ஆராயப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொலிஸார்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டளைச்சட்டத்தின் 28-ம் பிரிவின்கீழ் இந்தமன்றுக்கு அதிகாரமில்லை [இந்நிலையில் திருவாளர் இராஜா பெர்ணண்டோ சிறைச்சாலை ஆணையாளரால் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரிக்கு கொடுக்கப்பட்ட கடிதத்தை நீதிமன்றுக்கு காண்பிக்கின்றார்] அமைச்சரால் குறித்த இரு சந்தேகநபர்களையும் தடுப்புக்காவலில் வைக்கும்படி இடப்பட்ட கட்டளைச்சட்டம் முறையானதாக விருப்பதால் சிறைச்சாலை அதிகாரி அந்தக் கட்டளையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் ஆவே சிறைச்சாலை அதிகாரி நல்லெண்ணத்துடன் அமைச்சரின் கட்டளையை நிறைவேற்றியுள்ளார் ஆயின் சிறைச்சாலை அதிகாரி அதுபற்றி மன்றுக்கு அறிவிக்காததையிட்டு வருந்துகிறேன். அதையிட்டு சிறைச்சாலைஅதிகாரி வருத்தப்படுகின்றார்

நீதவான்: கேள்வி நீங்கள் இந்தமன்றுக்கு செய்த சமர்ப்பணங்கள் சட்டமா அதிபரின் அபிப்பிராயமா?

அரசுதரப்புசட்டத்தரணி: ஆம்

சட்டத்தரணி: இராஜா விசுவநாதன் இந்த வழக்கிலிருந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரியை விடுவிக்கும்படி வேண்டுகிறேன்.

நீதவான்; உங்களுடைய கூற்றை ஆராய்ந்தால் விசேட சூழ்நிலையில் தாமதிக்காது தடுப்புக்காவல் கட்டளைச் சட்டத்தை நிறைவேற்றுவது அவசியமாகும்

அரச சட்டத்தரணி ஆம் பயங்கரவாதிகளை கட்டுப்படுத்த தாமதியாமல் தடுப்புக்காவல் கட்டளைச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமான சூழ்நிலையில் தான் இந்தச்சட்டம் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்டது ஆகவே மன்றுக்கு அதுபற்றி அறிவிப்பதற்கு காலதாமதம் ஏற்படும் என்ற சூழ்நிலையில் தான் இந்த விசேட கட்டளை பிறப்பிக்கப்பட்டது

நீதவான்; அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் அமைச்சரால் இதுபோன்ற ஒரு கட்டளை பிறப்பிக்க இடம் உண்டு

அரச சட்டத்தரணி ஆம் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் 1971-ம் ஆண்டுக்கலவரத்தில் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பல சந்தேகநபர்கள் அமைச்சரின் உத்தரவுப்படி சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர் ஆகவே அமைச்சரின் உத்தரவு வலுவுள்ள சட்டரீதியான உத்தரவாகும் என்று கூறுகின்றார்

சட்டத்தரணி; ஜிம்மி இராசரத்தினம் பயங்கரவாத தடுப்புக்காவல் கட்டளைச்சட்டம் 7[1] ஆம் பிரிவின்கீழ் ஒரு சந்தேகநபரை மன்றுக்கு கொண்டுவராது 72 மணித்தியாலத்துக்கு கைதுசெய்து வைத்திருக்கலாம் இந்த அதிகாரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இராணுவத்தினருக்கும் உண்டு குறித்த 72 மணித்தியாலயம் கடப்பதற்கு முன்னர் அமைச்சர் அந்தச் சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைப்பதற்கு கட்டளையிடலாம் தடுப்புக்காவல் கட்டளைச் சட்டத்தின் 9-ம் பிரிவின் கீழ் அந்தச் சந்தேகநபரை மன்றுக்கு கொண்டு வருவதற்கு தடுப்புக்காவலில் வைப்பதற்கு சட்டரீதியான அதிகாரம் அமைச்சருக்குண்டு சந்தேகநபர்களை மன்றுக்குக் கொண்டுவந்தபின்னர் அமைச்சர் கட்டளை இடமுடியாது பாராளுமன்றம் பயங்கரவாத தடுப்புக்காவல் சட்டத்தை ஆக்குகின்ற பொழுது மன்றின் பொறுப்பில் இருக்கின்ற சந்தேகநபரையும் அமைச்சர் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிட அதிகாரம் உண்டு. என்பதை தெட்டத்தெளிவாக காட்டியிருக்கலாம் ஆனால் அவ்வாறு சட்டத்தில் காட்டவில்லை, நீதிநிருவாக அதிகாரத்தில் நிருவாக அதிகாரம் மேலாகவோ முரண்பாடாகவோ இருக்கமுடியாது அத்துடன் தலையிடவும் முடியாது.

சட்டத்தரணி இராஜா விசுவநாதன்: மன்றின் கட்டளைக்கு மேலாக அமைச்சரால் கட்டளை இடமுடியாது. நீதிநிருவாகத்தில் அமைச்சர் தலையிடவும் முடியாது. அது மனித உரிமைகள் கட்டளைச் சட்டத்தை மீறியதாகும் இதனால்தான் ஒருசந்தேக நபரை பொலிஸ் உத்தியோகத்தரோ இராணுவத்தினரோ 72மணித்தியாலத்துக்கு மேல் கைது செய்து வைத்திருக்க முடியாது இந்தச்சந்தேக நபர்களின் விடயத்தில் நீதிநிருவாகத்தில், நிருவாகம் தலையிடுவதாக இருக்கிறது என்று கூறுகிறார்.

அரச சட்டத்தரணி இராஜ் பெர்ணண்டோ: "சாதாரண சட்டத்தின் கீழ் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்திருந்த இந்தச்சந்தேக நபர்களை பின்பு அமைச்சர் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கும்படி உத்தரவிட்டிருக்கின்றார். அவர்கள் எங்கிருந்தாலும் உத்தரவிட அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. குறித்த சந்தேக நபர்கள் இந்த மன்றின் முன்னிலையில் சாதாரண சட்டத்தின் கீழ் தான் குற்றஞ்சாட்டி கொண்டு வரப்பட்டார்கள்"

நீதவான் இம்மாதம் 21ம் திகதி தீர்ப்பு வழங்குவார்.

## நவராத்திரி விரதாரம்பம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சோதிட ஆய்வு மன்றம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாட்டில் உள்ள பல சைவ, சோதிட அறிஞர்களும் சைவக்குருக்கள்மாரும் சமர்ப்பித்த தாமதி வருட நவராத்திரி விரதாரம்பம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், மன்றத்தினால் நேற்று ஆராயப்பட்டு, இம் மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை தான் நவராத்திரி விரதாரம்பம் கொள்ளப்பட வேண்டும் என்ற இறுதி முடிவும் நேற்றைய கூட்டத்தில் எடுக்கப் பட்டது.


# கிளிநொச்சி மாவட்டம்

16-9-81 முதல் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கிளிநொச்சி மாவட்டப்பகுதி பிரதம விற்பனையாளராகப் பின்வரும் ஸ்தாபனத்தாரை நியமித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இப்பகுதியிலுள்ள எமது தற்போதைய விற்பனையாளர்கள் தயவு செய்து எமது பிரதம முகவருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

கலா ட்ரேட்ஸ்

KALA TRADES

கண்டி வீதி, கிளிநொச்சி. (தொலைபேசி: 312)

—நிர்வாகி, ஈழநாடு.


## மரண அறிவித்தல்

### இ. சிதம்பரநாதன்

மானிப்பாயைச்சேர்ந்த இளைப்பாறிய விரல் அடையாள நிபுணர் திரு. இ. சிதம்பரநாதன் காலமாகிவிட்டார், இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும், அற்புதவல்லி, அமுதவதி, கமலவதி, விமலநாதன்-வர்த்தகவங்கி, ஆகியோரின் அன்புத்தந்தையும், ராஜேந்திரன்- புகையிரத இலாகா, சிவராஜா, ஜெயவீரசிங்கம், அமுதா, ஆகியோரின் அன்பு மாமனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய் 15-9-81 மாலை 4 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும், இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

0952

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-1 இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 308ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 15-ம் திகதி அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100 36/81 P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8186.